# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

**ஆணை நாள்** 01.04.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 19119/B/2023**

**திரு.பெ.ஏழுமலை** — **மேல்முறையீட்டாளர்**

**/எதிர்/**

**பொதுத் தகவல் அலுவலர்/** — **பொது அதிகார அமைப்பு**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு**
**விழுப்புரம் 605 602.**

**ஆணை**

இவ்வாணையத்தால் 17.12.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.க.சீதாலட்சுமி, முதுநிலை நிர்வாக உதவியாளர் அவர்கள் 25.03.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி, இவ்வாணையத்தின் உத்தரவிற்கிணங்க, 30.12.2025 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டது எனத் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும், 17.12.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகாதது குறித்த விளக்க அறிக்கையினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், பொது தகவல் அலுவலர் அவர்கள், கடித எண்.4889/2023 நாள்.18.12.2023 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டது எனத் தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்கவில்லை. மேலும், இரண்டாம் மேல்முறையீட்டின் விசாரணை தேதியான 17.12.2025க்கு பிறகு கடித எண்.3955/2025 நாள்.30.12.2025 தேதியிட்டக் கடிதத்தின் வாயிலாக தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும், பொது அதிகார அமைப்பை அலைக்கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர் இரண்டாவது மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே இரண்டாவது மேல்முறையீடு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கதாகும் எனவும், பொது தகவல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதை இவ்வாணையம் ஏற்க மறுக்கிறது. ஏனெனில், சட்டப்பிரிவு 7 (1) ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள

தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் அவர்கள் 4 மாதங்கள் கழித்து தகவல் அளித்ததை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

3. மேலும், விசாரணை அறிவிப்பு (Notice of Enquiry) கடிதத்தை பெற்றிருந்தும், அதனை பொது தகவல் அலுவலர் பார்வைக்கு கொண்டு வராமல் கவனக்குறைவாக Lok Adalat Return தபால்களோடு கலந்து வைத்துவிட்ட இளநிலை நிர்வாக உதவியாளர் மீது தான் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதால், இளநிலை நிர்வாக உதவியாளருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டு அவர் மீதான துறை ரீதியான நடவடிக்கையும் நிலுவையில் இருந்து வருகிறது எனவும், எனவே பொது தகவல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட எவ்வித முகாந்திரமும் இல்லையென மாண்புமிகு தகவல் ஆணையத்திற்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்திருப்பதை இவ்வாணையம் வண்மையாக கண்டிக்கிறது. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 8 (2)-ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராக முடியாத சூழ்நிலையில் அவருக்கு பதவியில் நிகரான ஒரு அலுவலர் விசாரணைக்கு உரிய ஒப்புதல் கடித்துடன் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில், பொது தகவல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட எவ்வித முகாந்திரமும் இல்லையென தெரிவித்திருப்பதை இவ்வாணையம் ஏற்கவில்லை. மேலும், தகவல் ஆணையத்திலிருந்து அனுப்பப்படும் விசாரணை அறிவிப்பு மற்றும் கடிதங்களுக்கு அந்தந்த பொது தகவல் அலுவலரே பொறுப்பாவார். பொது தகவல் அலுவலர் பார்வைக்கு கொண்டு வராமல் கவனக்குறைவாக Lok Adalat Return தபால்களோடு கலந்து வைத்துவிட்ட இளநிலை நிர்வாக உதவியாளர் மீது தான் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்திருப்பது, பொது தகவல் அலுவலர் அவர்கள் தன்னுடைய பொறுப்புகளை தட்டிக் கழிக்கிறார் என்று இவ்வாணையம் கருதுகிறது.

4. மேலும், 17.12.2025ல் ஆஜராகக் கோரி மேல்முறையீட்டாளருக்கும், பொது தகவல் அலுவலருக்கும் அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்பில், மேல்முறையீட்டாளர் விசாரணையின் போது நேரில் ஆஜராக வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், மனுதாரர் நேரில் ஆஜராகியுள்ளார். எனவே, மேல்முறையீட்டாளர் வந்து சென்ற செலவினங்களுக்காக ரூ.2,500/- ஐ பொது அதிகார அமைப்பு வழங்க வேண்டுமென்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, பொது அதிகார அமைப்பு வழங்க வேண்டியதில்லை எனத் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்கவில்லை. எனவே, கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகின்றது :-

1. சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும் காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது

என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று இவ்வாணையத்திற்கு 08.05.2026 அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.

2. 17.12.2025 அன்று நடந்த விசாரணைக்கு பொது தகவல் அலுவலர் அவர்கள் ஆஜராகாத நிலையில், மனுதாரர் தான் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலிருந்து தகவல் ஆணையத்தின் விசாரணையில் பங்கேற்க வந்துச் சென்ற செலவினங்களுக்காக உரிய இழப்பீடு வழங்கப்படவேண்டுமென்று ஆணையத்தின் முன்பு வைத்த கோரிக்கையினை இவ்வாணையம் பரிசீலனை செய்து, பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, ரூ.2,500/- ஐ (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு) மனுதாரருக்கு வழங்கி, அவர் அதனை ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக - அன்று நேரிடையாக சமர்ப்பிக்குமாறு இன்றைய பொது தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்திரவிடுகிறது.

ஒம்/- ரா.பிரியகுமார்
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 19119/B/2023
பெறுநர்
பொது அதிகார அமைப்பு:
பொது தகவல் அலுவலர் /
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு
விழுப்புரம் 605 602.

மனுதாரர்:
திரு.பெ.ஏழுமலை
வடக்கு தெரு,
காட்டு எடையார் அஞ்சல்
உளுந்தூர்பேட்டை வட்டம்
ஜி.அரியூர் (வழி),
கள்ளக்குறிச்சி மாவட்டம் 605 751.

Copy to: File
VM/PA - 13.04.2026